**மாந்தை மேற்கு பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 17 யூலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் பாதீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 4,500,000 பெறுமதியான முள்ளிக்குளம் வீதி அமைத்தல் வேலை திட்டமானது நிறைவேற்றப்படாத போதிலும் சில்லறைக்கடன் கொடுனர் கணக்கில் உள்ளடக்கப்பட்டதனால் நடப்பு பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | சபை நிதியினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டமானது பௌதீக ரீதியாக மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்படாமல் சில்லறைக் கடன் கொடுநர் கணக்கில் காட்டப்பட்டுள்ளது | குறித்த ஒப்பந்த வேலை நிறைவேற்றப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத தொகைகள் மட்டும் சில்லறை கடன் கொடுனர் கணக்கில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பொறி இயந்திரம் மற்றும் தளபாடம் தொடர்பில் அவற்றின் கொள்வனவு பெறுமதி ரூபா 3,102,108 ஆக உள்ள போதும் ஐந்தொகையின் படி ரூபா 3,108,243 ஆக இருந்தமையால் பிரதான ஏட்டில் காட்டப்பட்ட மீதிக்கும் ஐந்தொகையில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. | மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட பொறி இயந்திரம் மற்றும் தளபாடம் தொடர்பில் அவற்றின் கொள்வனவுப் பெறுமதி கணக்குகளில் சரியாக காட்டப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது என்பதுடன் பிரதான ஏட்டில் மாத்திரம் தவறுதலாக பதிவுகள் விடுபட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறாது | பிரதான ஏட்டின் படியான இறுதி மீதியே ஐந்தொகையில் காட்டப்பட வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 30/2016 ஆம் இலக்க 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபம் | சபையின் பயன்பாட்டிலுள்ள இரண்டு வாகனங்களிற்கு இரண்டு வருடங்களிற்கு மேலாக எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | குறிக்கப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது | சுற்று நிருபத்திற்கமைவாக குறித்த கால இடைவெளியில் எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| | (i) இலக்கம் 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்த வைப்புக்கள் ரூபா 293,001 தொடர்பாக தொடர் நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பில் சபை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது | நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை சபையினால் எடுத்தல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,797,696 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,084,547 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2019 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகைகள் | 7,531,473 | 8.871,196 | 710,519 | 9,001,660 | 6,355,635 | 734,550 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 635,500 | 892,930 | - | 541,500 | 839,230 | - |
| ஏனைய வருமானம் | 13,495,663 | 19,500,763 | 718,175 | 11,842,245 | 25,272,438 | 439,500 |
| | **21,662,636** | **29,264,889** | **1,428,694** | **21,385,405** | **32,467.303** | **1,174.000** |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,796,645 தொகையான நீதி மன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன | மீளாய்வாண்டிற்குரிய நீதி மன்ற தண்டப்பணங்கள் அடுத்து வரும் ஆண்டில் கிடைக்கப்பெறும் | உரிய காலத்தில் நீதி மன்ற தண்டப்பணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) முத்திரைக்கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,638,458 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | முத்திரைக்கட்டணங்களான து மாகாண திறைசேரி ஊடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தினுள் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியபோதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் உபவிதிகள் எவையும் சபையினால் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுவான உபவிதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுவதுடன் சந்தர்ப்பங்கள், தேவைப்பாடுகள் ஏற்படுகின்ற போது சட்டங்களுக்கு அமைவான தனியான உபவிதிகள் உருவாக்கப்பட்டு பின்பற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது | சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் உருவாக்கப்படல் வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான கடை வாடகை நிலுவை ரூபா 57,011 இனை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை நிலுவை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியாக வருமான பரிசோதகர் மூலம் நேரடியாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றது | உரிய காலத்தினுள் வாடகை நிலுவையினை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) நான்கு தொடக்கம் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக பெறப்பட வேண்டிய குடிநீர்க்கட்டணம் மற்றும் சேவைக்கட்டணம் என்பவற்றின் மூலம் வருமதியான நிலுவை ரூபா 718,175 இனை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேவைக்கட்டண நிலுவை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியாக வருமான பரிசோதகர் மூலம் நேரடியாக அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. | குடிநீர்க்கட்டணம் சேவைக்கட்டணம் தொடர்பான வருமதிகளை உரிய காலத்தில் அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) அடம்பன் உப அலுவலக எல்லைக்குள் காணப்படுகின்ற 35 அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கப்பட்ட கட்டடங்களில் 22 கட்டடங்கள் அரச பொதுக் கட்டடங்கள், சிவில் அமைப்புக்களின் கட்டங்கள் மற்றும் மதஸ்தலங்கள் என்பன உள்ளடங்குகின்றன இவர்களுக்கு கட்டட அனுமதி பெறுவது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து கட்டடங்களுக்கும் முறையான கட்டட அனுமதியை பெற்று அமைப்பதற்கு அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது | அனுமதியற்ற கட்டிடங்கள் தொடர்பாக சபையினால் உரிய காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும |
| (ஈ) சபையின் பயன்பாட்டிலுள்ள 53 காணிகளிற்கான உறுதிகள் இல்லாததுடன் அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சபையின் கோரிக்கைக்கு ஏற்ப தற்போது 9 காணிகள் நில அளவைத் திணைக்களத்தினால் அளக்கப்பட்டுள்ளது. வரைபடம் கிடைக்கப்பெற்றதும் உறுதிகளை பெறுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பதுடன் ஏனைய காணிகளை அளப்பதற்கான கோரிக்கை நில அளவைத் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது | காணிகளிற்கான உறுதிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 3.3 மனித வள முகாமைத்தவம்

### (அ) பதவியணியில் உள்ள வெற்றிடங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினது 05 ஆளணிக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் தாமதமடைந்துள்ளன | வெற்றிட விபரங்கள் நடவடிக்கைக்காக மாதம் தோறும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது | ஆளணிக்குரிய வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### (ஆ) ஊழியர் பிணைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PF/01/2017 இலக்க 04 மார்ச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச்சுற்று நிருபத்தின் படி பிணைப்பணம் செலுத்தப்படவேண்டிய 14 உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த ஊழியர்பிணைத் தொகை ரூபா 157,500 ஆன போதும் அத்தொகை செலுத்தப்படாமல் ரூபா 72,500 மட்டுமே செலுத்தப்பட்டமையால் ரூபா 85,000 குறைவாக செலுத்தப்பட்டுள்ளது. | மாகாண நிதிச்சுற்று நிருபத்தின் படி பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டிய தொகை கணக்கிடப்பட்டு மீதித் தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது | உரிய சுற்று நிருபத்தின் பிரகாரம் பிணைப்பணம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையினால் மீளாய்வாண்டில் மேற்க்கொள்ளப்பட்ட E- Library system இற்கான வேலையானது பூர்த்தி செய்யப்படாததுடன் இதற்காக Egait (PVT) Ltd இற்கு செலுத்த வேண்டிய ரூபா 500,000 செலவுக்கடன் வழங்குனர் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | தற்போது வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளமையால் சில்லறைக் கடன் கொடுனர் தொகை உறுதிச்சீட்டிலக்கம் 23,24,25 மற்றும் 26 (10.02.2020) மூலம் வழங்கப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது. என்பதுடன் குறித்த இணையத்தளத்தை கேள்வி உள்ளதாக மாற்றும் பொருட்டு தொடர்ச்சியாக புத்தகங்களின் தரவேற்றம் இடம்பெறுகின்றது | நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்படாத தொகைகள் மட்டுமே சில்லறை கடன் கொடுனர் கணக்கில் உள்ளடக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ)மீளாய்வாண்டில் சபையினால் E-Library system இற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 154,505 பெறுமதியான 05 கணனி உபகரணங்கள் பாவனைக்குட்படுத்தப்படாது உள்ளது. | முழுமையடைந்ததும் அது தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்தி தொடர்ச்சியான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | உத்தரவாத காலம் முடிவுறுவதால் கணணி உபகரணங்கள் குறித்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தல் வேண்டும் |
| (இ)மன்னார் மாவட்ட செயலகத்தினால் 16 சனவரி 2015 இல் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 உயிர்ப்பாதுகாப்பு அங்கிகள் பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் நீண்டகாலமாக களஞ்சியத்தில் காணப்படுகின்றது. | இவை வழங்கப்பட்ட காலப்பகுதியின் பின்னர் எமது பிரதேசத்தில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமையால் இவை களஞ்சியத்தில் பேணிப்பதுகாக்கப்படுகின்றது என்பதுடன் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இவை பயன்படுத்தப்படும் | உயிர் பாதுகாப்பு அங்கிகளை பாவனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேலதிகமானவற்றை தேவையானவர்களுக்கு கூட்டத்தீர்மானத்தின் பிரகாரம் நன்கொடையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஈ)2009 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் ரூபா 850,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இருசக்கர உழவு இயந்திரமும் பெட்டியும் மற்றும் ரெய்லரும் பாவனையற்ற நிலையில் காணப்படுவதுடன் உரிமை மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. | தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றமையாலும் தற்போது பதிவை மேற்கொண்டு உரிமையை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பிலான ஆலோசனைகள் பெறப்படுகின்றது | உரிமை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீட்டில் காணப்படும் இரண்டு செலவின விடயங்களின் கூட்டுமொத்தம் ரூபா 5,261,000 ஆக உள்ள போதும் உண்மைச் செலவினம் ரூபா 5,882,869 உள்ளதால் ரூபா 621,869 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விடயமானது சபையின் பாதீடு தயாரிக்கும் போது அதன் செலவினத்தின் அவசியத்தன்மை கருத்தில் கொள்ளப்படாமையை குறிப்பிடுகின்றது | வாகனங்களுக்கான (JCB) எதிர்பார்த்ததை விட அதிக கேள்வி ஏற்பட்டமையால் அவை வருமான ஈட்டலுக்கு பயன்படுத்தப்பட்டது இதனால் அதன் சாரதிகளுக்கான பயணக்கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்களும் அதிகரித்தது இதனால் ஏற்பட்ட பயணச்செலவுகள் மற்றும் வழங்கு பொருட்களினதும் தேவைப் பொருட்களினதும் மேலதிக செலவினமானது கௌரவ சபையின் அனுமதியுடன் உபமான்ய வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் வகை மாற்றம் மூலமும் சீர்செய்யப்பட்டது | பாதீடு தயாரிக்கப்படும் போது வினைத்திறனான முறைமைகள் கருத்தில் கொள்ளப்பட்டு பாதீடு தயாரிக்கப்படல் வேண்டும் |